ஸ்ரீ சுபகிருது வருடம் தை மாதம் 9–ம் தேதி திருவள்ளுவராண்டு 2054 (2023–ம் ஆண்டு ஜனவரி 23–ம் தேதி) திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு அவசரக் கூட்டம் நகர்மன்ற கூடத்தில் நடைபெற உள்ளது. மேற்படி, நகர்மன்ற கூட்டத்திற்கு அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களும் தவறாது வருகை தரும்படி அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பட்டுக்கோட்டை.
நாள்: 21.01.2023.

நகர்மன்ற தலைவர்
பட்டுக்கோட்டை நகராட்சி.

**பொருள் எண்:1**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் 10.01.2023–ம் தேதிய செயல்முறைகள் ந.க.எண்: 32945/2022/EA2– SWM–1 உத்திரவில், பட்டுக்கோட்டை நகராட்சி பகுதியில், திடக்கழிவு மேலாண்மை பணிகளின் கீழ் குப்பைகள் உருவாகும் இடங்களிலேயே மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என தனித்தனியாக பிரித்து சேகரம் செய்து மறு சுழற்சி செய்யும் இடத்திற்கு கொண்டு வரும் பணியினை வெளிக்கொணர்வு முகமை மூலம் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கி ஒப்பந்த நிறுவனத்தை மூன்று ஆண்டுகளுக்கு தேர்வு செய்ய அனுமதித்து உத்திரவிடப்பட்டுள்ளது.

| வ.எண் | அனுமதிக்கப்பட்ட விபரங்கள் | எண்ணம் / தொகை |
|---|---|---|
| 1 | பணியிடங்கள் :<br>1) தூய்மைப்பணியாளர்கள்<br>2) மேற்பார்வையாளர்கள்<br>3) ஓட்டுநர்கள் | 119 எண்ணம்<br>6 எண்ணம்<br>18 எண்ணம் |
| 2 | தினசரி சேகரமாகும் திடக்கழிவு விபரம்<br>(நாள் ஒன்றுக்கு) | 27.80 மெட்ரிக் டன் |
| 3 | ஒப்பந்த நிறுவனத்திற்கு அனுமதிக்கப்பட்ட தொகை<br>(டன் ஒன்றுக்கு) | ரூ.4158.66 |
| 4 | ஒப்பந்த நிறுவனத்திற்கு நாள் ஒன்றுக்கு அனுமதிக்கப்பட்ட தொகை | ரூ.1.16 லட்சம் |
| 5 | ஒப்பந்த நிறுவனத்திற்கு ஓராண்டிற்கு அனுமதிக்கப்பட்ட தொகை | ரூ.423.40 லட்சம் |
| 6 | ஒப்பந்த நிறுவனத்திற்கு வழங்க வேண்டிய வரி இனங்கள் (GST, LWF) | ரூ.80.44 லட்சம் |
| 7 | ஒப்பந்த நிறுவனத்திற்கு ஓராண்டிற்கு அனுமதிக்கப்பட்ட அதிகபட்ச தொகை | ரூ.503.84 லட்சம் |
| 8 | ஒப்பந்த நிறுவனத்திற்கு மூன்று ஆண்டுகளுக்கு வழங்கப்படும் தொகை | ரூ.1511.52 லட்சம் |

இப்பணியை மேற்கொள்ள பட்டுக்கோட்டை நகராட்சிக்கு, ஆண்டு ஒன்றிற்கு சுமார் 503.84 லட்சம் வீதம் மூன்றாண்டுகளுக்கு ரூ.1511.52 லட்சம் செலவாகும் என்பதனால் நிதிநிலையினை கருத்தில் கொண்டு இத்தொகையை பொது நிதி மற்றும் 15th CFC SBM Tied grant – நிதியிலிருந்து செலவு மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும், இதன் பொருட்டு மூன்று ஆண்டுகளுக்கு ஒப்பந்த நிறுவனத்தை தேர்வு செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரவும், அதற்கான விளம்பர செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: 1) மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்: 4386/2022/எச்1.

**தீர்மான எண்..345 .. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்:2</u>**

இந்நகராட்சியில் உள் கட்டமைப்பு மற்றும் வசதிகள் திட்டம் 2022–23–ன் கீழ் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட நரியம்பாளையம் பகுதியில் புதிதாக பேருந்து நிலையம் அமைக்கும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை Sudha Advertising Tripur என்ற நிறுவனம் மூலம் மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரில் மற்றும் தினசரி நாளிதழில் பிரசுரம் செய்யப்பட்டதற்கான விளம்பரக்கட்டணம் ரூ.102218/–ஐ பொது நிதியிலிருந்து Sudha Advertising Tripur என்ற நிறுவனத்திற்கு தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண். 3865 /2022/இ1) |

**தீர்மான எண்..346 .. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

ஒம் / S. சண்முகபிரியா, எம்.சி.ஏ.,
நகர்மன்ற தலைவர்
பட்டுக்கோட்டை நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்
பட்டுக்கோட்டை நகராட்சி.